முதுகலை முதலாமாண்டு – தமிழ் இலக்கியம்

தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் : முதற்பருவம்

பாடக்குறியீட்டு எண் : 18MTA12C

அலகு : 5 ; 9. குற்றியலுகரப் புணரியல்.

முனைவர். ந. மகாலட்சுமி
உதவிப்பேராசிரியர்.

# 9. குற்றியலுகரப் புணரியல்

குற்றியலுகரம் மொழிக்கு முதலாகவும் ஈறாகவும் வரும் சிறப்புடையது. குற்றியலுகரம் ஒன்றாயினும் அது ஈற்று அயலெழுத்தை அடிப்படையாகக் கொண்டு ஆறாகப் பகுக்கப்படுகின்றது. அவற்றுடன் பொருட்பெயர், அளவுப்பெயர், நிறைப்பெயர், எண்ணுப்பெயர் போன்ற பல்வகைப் பெயர்கள் புணரும். இதன்கண் அமைந்த நூற்பாக்கள் 17.

## 1. குற்றியலுகரத்தின் இயல்பும் வகையும்:

1. ஆடு - ஈரெழுத்து ஒருமொழி (or) நெடில்தொடர்
2. படகு - உயிர்த்தொடர்
3. மூழ்கு - இடைத்தொடர்
4. கஃசு - ஆய்தத்தொடர்
5. எழுத்து - வன்தொடர்
6. அம்பு - மென்தொடர்

எனக் குற்றியலுகரத் தொடர் அறுவகைப்படும்.

இவ்வறு வகைத் தொடர்களின் இறுதியிலும் வரும் உகரம் 1/2 மாத்திரை அளவினதாகக் குறுகி ஒலிக்கும். மேற்கூறிய தொடர்கள் சிலவற்றின் இடையில் இரண்டு மெய்யெழுத்துக்கள் இணைந்து நிற்கும். அவை இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆகா.

(எ-டு) ஈர்க்கு, பீர்க்கு → வன்தொடர்க்குற்றியலுகரம்
நொய்ம்பு, மொய்ம்பு → மென்தொடர்க் குற்றியலுகரம்.

ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தைக் கொண்டே பெயரிடப்படும். அவை அல்வழி, வேற்றுமை என்னும் இருவகையிலும் புணரும்.

## குற்றியலிகரம்:

குற்றியலுகரத்தை அடுத்து யகர முதல் மொழிவரின் உகரம் மறைய இகரம் வரும். அந்த இகரம் குறுகி ஒலிக்கும் குற்றியலிகரமாகும்.

(எ-டு) நாடு + யாது = நாட்+உ+யாது → நாட்+இ+யாது → நாடியாது.
வரகு + யாது = வரக்+உ+யாது → வரக்+இ+யாது → வரகியாது.

## நெடில் தொடர், உயிர்த்தொடர்:

நெடில் தொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆகிய இரண்டும் நிலைமொழியாக நிற்கும். அவை வல்லெழுத்தினை முதலாக உடைய வருமொழியோடு வேற்றுமையில் புணரும் போது நிலைமொழியின் ஈற்றில் நிற்கும் உகரம் ஏறிய ஒற்று இரட்ட, வருமொழி வல்லினம் மிகும்.

(எ-டு) ஆடு + கால் = ஆட்டுக்கால், வயிறு + பசி = வயிற்றுப்பசி.

REDMI NOTE 8 PRO
ந.மகாலட்சுமி

• சில இடங்களில் ஒற்று இரட்டாமலும் வல்லினம் மிகாமலும் வருவதுண்டு. (எ-டு) நாகு + கால் = நாகுகால், வரகு + கதிர் = வரகுகதிர்.

இடைத்தொடர், ஆய்தத்தொடர்:

இடைத்தொடர், ஆய்தத்தொடர்களின் முன் வல்லினம் வர இயல்பாம்.
(எ-டு) தெள்கு + கால் = தெள்குகால், எஃகு + கால் = எஃகுகால்.

வன்தொடர், மென்தொடர்:

வன்தொடர், ஆய்தத் தொடர்களின் முன் வல்லினம் வர வல்லெழுத்து மிகும்.
(எ-டு) கொக்கு + கால் = கொக்குக்கால், குரங்கு + தலை = குரங்குத்தலை.
மென்தொடர்க் குற்றியலுகரத்தின் இடையில் உள்ள மெல்லெழுத்துத் தனக்கு இனமாகிய வல்லெழுத்தாகத் திரியும்.

சில இடங்களில் மென்தொடர் குற்றியலுகரத்தின் முன் நிற்கும் ணகாரத்திற்கு டகாரம், னகாரத்திற்கு றகாரம் இனையெழுத்தாக வரும்.
(எ-டு) எண்கு + குட்டி = எட்குக்குட்டி, அன்பு + தளை = அற்புத்தளை.

2. குற்றியலுகர ஈறுகள் பெறும் சாரியை:

மரப்பெயர்:

• வன்தொடர், மென்தொடர் குற்றியலுகர ஈற்று மரப்பெயர்கள் வல்லெழுத்தோடு புணரும் போது 'அம்' சாரியை தோன்றும்.
(எ-டு) தேக்கு + கட்டை = தேக்கங்கட்டை, வேம்பு + கிளை = வேப்பங்கிளை.

• மெல்லின ஒற்றுக்கள் வல்லினமாகத் திரியாத மரப்பெயர்களும் உள்ளன. 'அம்' சாரியை பெற்று முடியும் (எ-டு) குருந்து + கிளை = குருந்தங்கிளை.

• மென்தொடர்ச் சொற்களுள் சில அக்குச் சாரியை பெறும் (எ-டு) குன்றக்கூகை.

• மென்தொடர் எண்ணுப்பெயர் 'அன்' சாரியை பெறும் (எ-டு) ஒன்றன்காயம்.

• வண்டு, பெண்டு என்பன 'இன்' சாரியை பெறும்.
(எ-டு) வண்டு + கால் = வண்டின் கால், பெண்டு + கால் = பெண்டின் கால்.

• பெண்டு என்பது 'அன்' சாரியையும் பெறும் (எ-டு) பெண்டு + கை = பெண்டன்கை.

• யாது, அஃது, இஃது, உஃது என்பன வேற்றுமையால் புணரும் போது 'அன்' சாரியை பெறும். சுட்டுப்பெயரில் உள்ள ஆய்தம் கெடும்.
(எ-டு) யாது + கோடு = யாதன்கோடு, அஃது + கோடு = அதன்கோடு.

• அஃது, இஃது, உஃது என்ற ஆய்தத்தொடர் அல்வழியில் உயிரின் முன் புணரும் போது ஆய்தம் கெடாமல் வரும் (எ-டு) அஃது + இல்லை = அஃதில்லை.

• ஆய்தத் தொடரில் உயிர் அல்லாத பிற கணங்கள் வந்தால் ஆய்தம் கெடும்.
(எ-டு) அஃது + கடிது = அதுகடிது.

REDMI NOTE 8 PRO
நா. மகாலட்சுமி

- அறுவகைக் குற்றியலுகரமும் அல்வழிப் பொருண்மையால் வல்லெழுத்து வர இயல்பாய் முடியும். (எ-டு) குரங்கு + கடிது = குரங்கு கடிது.
- வன்தொடர்க் குற்றியலுகரம் அல்வழியில் வல்லெழுத்து வர வல்லினம் மிக்கு முடியும். (எ-டு) கொக்கு + பறந்தது → கொக்குப் பறந்தது.
- ஆங்கு, ஈங்கு, ஊங்கு என்னும் சுட்டுச் சொல்லும் 'யாங்கு' எனும் வினாச் சொல்லும் வல்லினம் வர மிகும்.
(எ-டு) அங்கு → ஆங்கு + கொண்டான் = ஆங்குக் கொண்டான்.
- 'யாங்கு' என்னும் சொல் இயல்பாகவும் இருக்கும். (எ-டு) யாங்கு கொண்டான்.
- உண்மைப் பொருளை உணர்த்தும் 'உண்டு' என்னும் சொல்
(எடு) உண்டு + பொருள் → உண்டு + பொருள் → உண் + பொருள் → உள்பொருள்.
  - வருமொழி முதலில் பகரம் நீங்கலான ஏனைய வலின் இயல்பாம்.
(எ-டு) உண்டு + காணம் = உண்டு காணம்.

## திசைப்பெயர்:

- இரு திசைச் சொல் புணர்ந்தால் இடையே 'ஏ' வரும்.
(எ-டு) வடக்கு + தெற்கு = வடக்கு + ஏ + தெற்கு = வடக்கே தெற்கு.
கிழக்கு + மேற்கு = கிழக்கு + ஏ + மேற்கு = கிழக்கே மேற்கு.
- திசைப் பெயரொடு திசைப்பெயர் புணர்தல்.
வடக்கு + கிழக்கு = வடக்கு + கிழக்கு → வடகிழக்கு
வடக்கு + மேற்கு = வடக்கு + கிழக்கு → வடகிழக்கு
தெற்கு + கிழக்கு = தெற்கு + கிழக்கு → தென்கிழக்கு
தெற்கு + மேற்கு = தெற்கு + மேற்கு → தென்மேற்கு.

## 3. குற்றியலுகர எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி:

- பத்தின் முன் ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்ணுடன் புணர்தல்.
பத்தின் துகரம் கெட்டு, இடையில் இன் சாரியை வரும். (இரண்டு தவிர)
பத்து + ஒன்று → பத் + ஒன்று → பத் + இன் + ஒன்று → பதினொன்று.
பத்து + இரண்டு → ப + இரண்டு → பன் + இரண்டு → பன்னிரண்டு.
பத்து + மூன்று → பத் + மூன்று → பத் + இன் + மூன்று → பதின்மூன்று
பத்து + நான்கு → பத் + நான்கு → பத் + இன் + நான்கு → பதின்நான்கு
பத்து + ஐந்து → பத் + ஐந்து → பத் + இன் + ஐந்து → பதினைந்து
பத்து + ஆறு → பத் + ஆறு → பத் + இன் + ஆறு → பதினாறு
பத்து + ஏழு → பத் + ஏழு → பத் + இன் + ஏழு → பதினேழு
பத்து + எட்டு → பத் + எட்டு → பத் + இன் + எட்டு → பதினெட்டு
பத்து + ஆயிரம் → பத் + ஆயிரம் → பத் + இன் + ஆயிரம் → பதினாயிரம்.
பத்து + கழஞ்சு → பத் + இன் + கழஞ்சு → பதின்கழஞ்சு. (நிறைப்பெயர்)
பத்து + கலம் → பத் + இன் + கலம் → பதின்கலம். (அளவைப்பெயர்)

REDMI NOTE 8 PRO
ந.மகாலட்சுமி

• ஒன்று முதலிய எண்ணுப் பெயர்களோடு பத்துப் புணர்தல்.

ஒன்று + பத்து → ஒன் + பத்து → ஒர் + உ + பத்து → ஒரு + பத்து → ஒருபஃது.

இரண்டு + பத்து → இர் + உ + பத்து → இரு + பத்து → இருபஃது, இருபது

மூன்று + பத்து → மூன் + பத்து → முன் + பத்து → முப் + பத்து → முப்பஃது, முப்பது

நான்கு + பத்து → நான் + பத்து → நாற் + பத்து → நாற்பஃது, நாற்பது

ஐந்து + பத்து → ஐந் + பத்து → ஐம் + பத்து → ஐம்பஃது, ஐம்பது

ஆறு + பத்து → அறு + பத்து → அறு + பஃது → அறுபஃது, அறுபது

ஏழு + பத்து → எழு + பத்து → எழு + பஃது → எழுபஃது, எழுபது

எட்டு + பத்து → எண் + பத்து → எண் + பஃது → எண்பஃது, எண்பது.

• தொண்ணூறு [ஒன்பது x பத்து]

ஒன்பது + பஃது

த் + ஒன்பது + பஃது (தகர ஒற்றுத் தோன்றல்)

தொன்பது + பஃது [நிலைமொழி பது கெடல்]

தொன்(ண்ண்) + பஃது [ன – ணகரமாகத் திரிந்து இரட்டும்]

தொண்ண் + பஃது [வருமொழி பகரமும் ஆய்தமும் கெடுதல்]

தொண்ண் + ஊ + து [ஊகாரம் தோன்றல்]

தொண்ணூ + று [தகர ஒற்று றகர ஒற்றாதல்]

தொண்ணூறு.

• எண்ணுப்பெயர் முன் அளவு, நிறைப் பெயர்கள் புணர்தல்.

ஒன்று முதல் ஒன்பது ஆகிய எண்ணுப்பெயர்கள் முன் அளவுப்பெயர், நிறைப்பெயர் வரும்பொழுது, முற்கூறிய எண்ணுப் பெயர்களின் விதிகளுக்கு ஏற்பப் புணரும்.

ஒன்று + கலம் = ஒருகலம் } அளவுப்பெயர்
இரண்டு + கலம் = இருகலம்

ஒன்று + கழஞ்சு = ஒருகழஞ்சு } நிறைப்பெயர்
இரண்டு + கழஞ்சு = இருகழஞ்சு

மூன்று + கலம் = முக்கலம் (னகர ஒற்று வருமொழிக்கு ஏற்பத் திரியும்)

ஐந்து + கலம் = ஐங்கலம் (நகர ஒற்று வருமொழிக்கு ஏற்ப மெல்லினமாதல்)

மூன்று + கழஞ்சு = முக்கழஞ்சு

ஐந்து + கழஞ்சு = ஐங்கழஞ்சு.

ஐந்து + தொடி = ஐந்தொடி (மெல்லினம் பெறுதலும் உண்டு)

REDMI NOTE 8 PRO

- எட்டின் முன் ந,ம,வ,அ வரின் இயல்பாக முடியும்.

    எட்டு + நாழி → எண் + நாழி → எண் + நாழி = எண்நாழி

    எட்டு + மண்டை → எண் + மண்டை → எண் + மண்டை = எண்மண்டை.

    எட்டு + வட்டி → எண் + வட்டி → எண் + வட்டி = எண்வட்டி.

    எட்டு + அகல் → எண் + அகல் → எண் + அகல் = எண்அகல்.

- ஐந்து, மூன்று முன் ந,ம வரின் வருமொழிக்கேற்ற ஒற்று வரும்.

    ஐந்து + நாழி → ஐ + நாழி = ஐந்நாழி

    ஐந்து + மண்டை → ஐ + மண்டை → ஐம்மண்டை

    மூன்று + நாழி → மூன் + நாழி → முன் + நாழி → மு + நாழி = முந்நாழி

    மூன்று + மண்டை → மூன் + மண்டை → முன் + மண்டை → மு + மண்டை = மும்மண்டை.

- மூன்றன் னகரம் லகரம் ஆதல் (வகரத்தின் முன்னால்)

    மூன்று + வட்டி → மூன் + வட்டி → முன் + வட்டி → முல்வட்டி.

- நான்கன் னகரம் லகரம் ஆதல் (வகரத்தின் முன்னால்)

    நான்கு + வட்டி → நான் + வட்டி → நால் + வட்டி = நால்வட்டி.

- ஐந்து என்பதன் இடையொற்று 'ந்' கெடும். (வகரத்தின் முன்னால்)

    ஐந்து + வட்டி → ஐந் + வட்டி → ஐவட்டி.

- ஒரு, இரு என்பதன் முதலெழுத்து உயிரின் முன் நீண்டொலிக்கும்.

    ஒரு + அகல் → ஒர்அ → ஒர் + அகல் → ஓர் + அகல் → ஓரகல்

    இரு + அகல் → இர்அ → இர் + அகல் → ஈர் + அகல் → ஈரகல்.

- மூன்று, நான்கு, ஐந்து → உயிரின் முன் புணர்தல்

    மூன்று + அகல் → மூன் + அகல் → முன் + அகல் → முல் + அகல் = முவ்வகல். (னகரம் வகரமாகியது)

    நான்கு + அகல் → நான் + அகல் → நால் + அகல் → நாலகல். (னகரம் லகரமாகியது)

    ஐந்து + அகல் → ஐந் + அகல் → ஐ + அகல் → ஐயகல்.

- மூன்றுடன் உழக்குப் புணர்தல்

    மூன்று + உழக்கு → மூன் + உழக்கு → மூவ் + உழக்கு → மூவுழக்கு.

    முதலெழுத்துக் குறுகாமல் நீண்டு ஒலிக்கும் (னகரம் வகரமாகியது)

- ஆறு உயிருடன் புணர்தல்

    ஆறு + அகல் = ஆற் + அகல் → ஆறகல்

    ஆறு + உழக்கு → ஆற் + உழக்கு → ஆறுழக்கு

    முதலெழுத்துக் குறுகாமல் இயல்பாகப் புணர்தல்.

REDMI NOTE 8 PRO

• அளவு நிறைப்பெயர்கள் ஒன்பதொடு புணர்தல்

ஒன்பது + கலம் -> ஒன்பது + இன் + கலம் -> ஒன்பதின்கலம் (இன் சாரியை பெறும்)

ஒன்பது + கழஞ்சு -> ஒன்பத் + இன் + கழஞ்சு -> ஒன்பதின் கழஞ்சு (இன் சாரியை பெறும்)

• ஒன்று முதல் ஒன்பதன் முன் நூறு புணர்தல்

ஒன்று + நூறு -> ஒன் + நூறு -> ஒர் + நூறு -> ஒருநூறு

இரண்டு + நூறு -> இரண் + நூறு -> இர் + நூறு -> இருநூறு

மூன்று + நூறு -> முன் + நூறு -> முந் + நூறு = முந்நூறு (னகரம் நகரமாகியது)

நான்கு + நூறு -> நான் + நூறு -> நான் + னூறு -> நானூறு.
(நகரம் னகரமானது)

ஐந்து + நூறு -> ஐந் + நூறு = ஐந்நூறு.

ஆறு + நூறு -> அறுநூறு.

ஏழு + நூறு -> எழுநூறு.

எட்டு + நூறு -> எண்ணூறு.

• ஒன்பது + நூறு

ஒன்பது + நூறு -> ஒன் + நூறு (நிலைமொழி ப,து கெட்டது)

த் ஒன் + நூறு (தகர ஒற்று நிலைமொழி முன் வருதல்)

தொன் + நூறு

தொள்ள + நூறு (னகர மெய் ளகர மெய்யாகி இரட்டித்தல்)

தொள்ள + ஊறு (வருமொழியில் நகர மெய் கெட்டது)

தொள்ள + ஆறு (வருமொழி ஊகாரம் ஆகாரமாதல்)

தொள்ள + ஆ + இர + று (று என்பதன் முன் இகரமும் ரகரமும் வருதல்)

தொள்ள + ஆயிரம் (வருமொழி 'று' கெட்டு மகரம் தோன்றும்)

தொள்ளா + ய் + இரம் (யகர உடம்படுமெய் தோன்றும்)

தொள்ளாயிரம்.

• ஒன்று, இரண்டொடு ஆயிரம் புணர்தல்.

ஒன்று + ஆயிரம் — இரண்டு + ஆயிரம்

ஒரு + ஆயிரம் — இரு + ஆயிரம் (ர்+உ - உகரம் கெட்டது)

ஒர் + ஆயிரம் — இர் + ஆயிரம் (முதல் நீளுதல்)

ஒராயிரம் — இராயிரம்

ஓராயிரம் — ஈராயிரம்

REDMI NOTE 8 PRO

- மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ஆயிரத்தோடு புணர்தல்.

மூன்று + ஆயிரம் → மூன் → முன் → முவ் + ஆயிரம் → மூவாயிரம்.
நான்கு + ஆயிரம் → நால் → நால் + ஆயிரம் → நாலாயிரம்.
ஐந்து + ஆயிரம் → ஐந் → ஐ + ஆயிரம் → ஐயாயிரம்.
ஆறு + ஆயிரம் → அறு → அறு + ஆயிரம் → அறாயிரம்.

- ஒன்பது + ஆயிரம் → ஒன்பது + இன் + ஆயிரம் → ஒன்பதின் + ஆயிரம் → ஒன்பதினாயிரம்.

- ஒன்று முதல் ஒன்பதன் முன் நூறாயிரம் புணர்தல்.

ஒன்று முதல் ஒன்பது ஈறாகிய எண்கள் நூறு என்பதோடு புணர்ந்ததைப் போலத் திரிபு பெற்று முடியும்.
(எ-டு) ஒன்று + நூறாயிரம் → ஒருநூறாயிரம்.
இரண்டு + நூறாயிரம் → இருநூறாயிரம்.

- நூறுமுன் ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்கள் புணர்தல்.

நூறு + ஒன்று → நூற்று → நூற்ற் + ஒன்று → நூற்றொன்று.
நூறு + இரண்டு → நூற்று → நூற்ற் + இரண்டு → நூற்றிரண்டு.
(இறுதிக் குற்றியலுகரம் மறைய ஒற்று இரட்டும்)

- நூறின் முன் ஒருபஃது முதலியன புணர்தல்.

நூறு + ஒருபஃது → நூற்று + ஒருபஃது → நூற்ற + ஒருபஃது → நூற்றொருபஃது.

- நூறுமுன் முகத்தல், நிறுத்தல் அளவைப் பெயர்கள்.

நிலைமொழியின் ஈற்று உகரம் ஏறி நின்ற றகர ஒற்று (ற்) இரட்டித்துப் (ற்று) புணரும். வன்தொடர் குற்றியலுகரம் வல்லெழுத்து மிக்கு முடியும். குற்றியலுகரம் கெடாது.
நூறு + கலம் → நூற்று → நூற்று + கலம் → நூற்றுக்கலம் (அளவை)
நூறு + கழஞ்சு → நூற்று → நூற்று + கழஞ்சு → நூற்றுக்கழஞ்சு (நிறை)

- ஒருபஃது முதலியவற்றுடன் ஒன்று முதலியன புணர்தல்.

ஒருபஃது + ஒன்று → ஒருபது + ஒன்று → ஒருப + த் + து + ஒன்று → ஒருபத்தொன்று.
பஃது என்பதில் உள்ள ஆய்தம் கெடும். அவ்விடத்து ஈற்று மெய்யாக்கி இனவெழுத்தாகிய ஒரு தகர ஒற்று இடையில் தோன்றும்.

- ஒருபஃது முதலியவற்றுடன் ஆயிரம் புணர்தல்.

ஒருபஃது + ஆயிரம் → ஒருபது + ஆயிரம் → ஒருபது + இன் + ஆயிரம் → ஒருபதினாயிரம்.
பஃது என்பதில் உள்ள ஆய்தம் கெடும். அவ்விரு சொற்களுக்கு இடையில் 'இன்' சாரியை தோன்றும்.

REDMI NOTE 8 PRO

• ஒருபஃது முதலியவற்றுடன் அளவு, நிறைப்பெயர்கள் புணர்தல்.

ஒருபஃது + கலம் -> ஒருபது + இன் + கலம் -> ஒருபதின்கலம் (அளவு)

ஒருபஃது + கழஞ்சு -> ஒருபது + இன் + கலம் -> ஒருபதின்கழஞ்சு (நிறை)

ஒருபஃது முதலான சொற்கள் ஆயிரத்தொடு புணரும் இயல்பினை ஒத்து ஒற்று மிகாமல் இன் சாரியை பெற்று முடியும்.

• ஒன்றுடன் மூவகைப் பொருட்பெயர்களும் புணர்தல்

1. க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்கள் வருமொழியாய் நிற்கும் பொழுது

(எ-டு) ஒன்று + கல் = ஒருகல், ஒன்று + படி - ஒருபடி.

2. ஞ, ந, ம என்னும் மெல்லெழுத்துக்கள் வருமொழியாய் நிற்கும் பொழுது

(எ-டு) ஒன்று + ஞாண் -> ஒருஞாண், ஒன்று + மணி -> ஒருமணி.

3. ய, வ என்னும் இடையெழுத்துக்கள் வருமொழியாய் நிற்கும் பொழுது

(எ-டு) ஒன்று + யாழ் - ஒருயாழ், ஒன்று + வட்டு -> ஒருவட்டு.

• ஒன்றுடன் 'உயிர்' முதலும் 'யா' முதலும் புணர்தல்.

உயிர் எழுத்துக்களும், யா என்னும் எழுத்தும் வருமொழியாக நின்று, ஒன்று என்னும் எண் நிலைமொழியாக நிற்கும் பொழுது,

1. ஒரு என்பதில் உள்ள ஒகரம் ஓகாரமாக நீளும்.

2. இறுதியில் உள்ள உகரம் கெடும்.

(எ-டு) ஒன்று + ஆடை -> ஓரு + ஆடை -> ஓர் + ஆடை -> ஓர்ஆடை

ஒன்று + யானை -> ஓரு + ஆடை -> ஓர் + யானை -> ஓர் யானை.

• எண்ணுப் பெயர்களோடு மா (அளவைப்பெயர்) புணர்தல்

இரண்டு முதல் ஒன்பது ஈறாக உள்ள எண்ணுப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் 'மா' என்னும் அளவைப்பெயர் வந்து புணரும். அப்புணர்ச்சியில் நிலைமொழியாகிய எண்ணுப் பெயர்கள் இயல்பாகவும் முடியும். அத்துடன் முன்பு மண்டை என்னும் அளவைப்பெயரின் புணர்ச்சியைப் போலத் திரிந்தும் திரியாமலும் முடியும்.

(எ-டு) இரண்டு + மா -> இரண்டு மா:- , இருமா.

மூன்று + மா -> மூன்றுமா, மும்மா.

• வேற்றுமையில் ல, ள ஈறுகள் புணர்வதற்குப் புறனடை.

ல, ள ஈறாகக் கொண்ட சொற்கள் நிலைமொழியாக நிற்கும். அவற்றின் முன் அம், கெழு ஆகியவையும் அவற்றைப் போன்ற பிற சாரியைகளும் வரும். இலக்கண மரபுக்கேற்பப் புணர்ந்து நிற்கும்

REDMI NOTE 8 PRO

அச்சாரியைகள் செய்யுளில் சொற்களைத் தொடர்புபடுத்துவனவாய் அமையும். அச்சொற்கள் வேற்றுமை குறித்த புணர்ச்சியால் பொருள்பெற நிற்கும்.

எ-டு) கல்கெழு கானவர் நல்குறு மகளே. (குறுந்-71)

கான் கெழு நாடு (அகம் 97)

• நிலைமொழி வருமொழியாகப் பகுத்துணரா முடியாச் சொற்கள்

1. உரிச்சொற்கள் 2. பண்புத்தொகை 3. வினைத்தொகை 4. எண்ணுப்பெயர்கள், 5. இவற்றைப் போன்ற பிறவும் வழக்கில் மருவி நடந்த இலக்கணத்தை உடையன. இச்சொற்களைப் பகுத்துப் பார்த்தால் அவற்றின் புணர்ச்சி முடிபு வேறுபாடுடையதாகத் தோன்றாது. எனவே அச்சொற்களைப் பகுத்துப் பார்க்காமல் உள்ளவாறே கொள்ள வேண்டும்.

எ-டு) வண் வணைத்தது, கார் கறுத்தது, நல் நலத்தது — உரிச்சொல்

கருஞ்சான்றான், கருங்குதிரை — பண்புத்தொகை.

ஆடரங்கு — வினைத்தொகை.

பப்பத்து — எண்ணுப்பெயர்.

உண்டான், கரியன்.

• எடுத்தோதிக் கூறாப் புணர்மொழிகளுக்குப் புறனடை.

புணரியல் முதலான ஆறு இயல்களிலும் சொற்களின் புணர்ச்சிக்கு இலக்கண விதிகள் கூறப்பட்டன. அவ்வாறு விதி கூறப்பட்ட சொற்களே அன்றிச் செய்யுளில் வேறுபிற சொற்களும் வரும். உலக வழக்கிலும் மருவி வேறுபடுகின்ற சொற்களும் உண்டு. அவற்றை அறிஞர்கள் தம்முடைய நுண்ணிய அறிவினால் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அச்சொற்களை உலக வழக்கோடும் செய்யுள் வழக்கோடும் பொருத்திப் பார்த்துப் புதிய விதிகளை அமைத்துக்கொள்க என்று சொல்லுவர் புலவர்.

எ-டு) நறவு + கண்ணி (நறவங்கண்ணி)

கள்ளி + காடு (கள்ளியங்காடு)

புன்னை + கானல் (புன்னையங்கானல்)

பொன் + கிளை (பொன்னங்கிளை)

ஆர் + கண்ணி (ஆரங்கண்ணி)

கானல் + பெருந்துறை (கானலம்பெருந்துறை)

இவை வேற்றுமைப் பொருட் புணர்ச்சியால் 'அம்' சாரியை பெற்றன.

REDMI NOTE 8 PRO

## வினாக்கள்

1. உகரம் குறுகுமிடங்கள் யாவை?
2. குற்றியலுகரம் புணர்மொழியுள் எவ்வாறு வரும்?
3. குற்றியலிகரம் புணர்மொழியுள் எவ்வாறு வரும்?
4. மரப்பெயர், திசைப்பெயர் புணர்ச்சிகளைக் கூறுக.
5. மூன்று என்னும் எண்ணுப்பெயர் எவ்வெவ்வாறு புணரும்?
6. ஐந்து என்னும் எண்ணுப்பெயர் எவ்வெவ்வாறு புணரும்?
7. தொண்ணூறு, தொள்ளாயிரம் — புணர்ச்சி விதி கூறுக.
8. வருமொழியில் ஆயிரம் வந்தால் ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள நிலைமொழிகளோடு எவ்வெவ்வாறு புணரும்?
9. 'அல்வழி கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் எல்லா இறுதியும் உகரம் நிறையும்' — விளக்குக.
10. நூறு என்ற எண்ணுப்பெயர், ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு எவ்வெவ்வாறு புணரும்?
11. நூறு என்ற எண்ணுப்பெயரோடு அளவு, நிறைப்பெயர்கள் எவ்வாறு புணரும்?
12. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு பொருட்பெயர்கள் புணரும்பொழுது நிகழும் மாற்றங்களை வரையறுக்க.
13. ஒருபஃது முதலானவற்றை அளவு, நிறைப்பெயர்களின் புணர்ச்சி இயல்புகளை எழுதுக.
14. ல, ள என்னும் மெய்யீறுகளின் செய்யுள் முடிபு யாது?
15. இரண்டு முதலான எண்களோடு அளவு மா என்ற சொல் பெறும் புணர்ச்சி நிலை என்ன?
16. எண்ணுப்பெயர்கள் புணருமாற்றைத் தொல்காப்பியர் வழிநின்று விளக்குக.

REDMI NOTE 8 PRO

17. குற்றுகர ஈற்றுச் சொற்களுக்கான பொதுப்புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.

18. குற்றுகர ஈற்றுச் சொற்களுக்கான சிறப்புப்புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.

19. குற்றியலுகரப் புணரியல் என்னும் தனி இயல் வகுக்கப்பட வேண்டிய காரணங்களை ஆராய்க.

20. பத்து என்ற எண்ணோடு பிற எண்ணுப்பெயர்கள் புணரின் நிகழும் மாற்றங்களைத் தெளிவுபடுத்துக.

21. பத்து என்ற எண்ணோடு நின்ற அளவுப் பெயர்கள் புணரின் உண்டாகும் நிலைகள் யாவை?

22. ஒன்று முதலான எண்ணுப் பெயர்களோடு பத்து என்ற எண்ணுப்பெயர் புணரின் நிகழும் மாற்றங்களை விளக்குக.

23. ஒன்று முதலான எண்ணுப் பெயர்களோடு அளவை நிறைப்பெயர் புணரின் நிகழும் மாற்றங்களை விளக்குக.

24. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களோடு நூறு என்ற எண்ணுப்பெயரின் புணர்ச்சி விகற்பங்களை விவரிக்க.

25. ஒன்று முதலான எண்ணுப் பெயர்களோடு ஆயிரம் என்ற எண்ணுப்பெயரின் புணர்ச்சி விகற்பங்களை விவரிக்க.

REDMI NOTE 8 PRO